1973 நவம்பர் 24]

வேலூர்–ஆர்க்காடு புறச்சாலை

*367 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வேலூர்–ஆர்க்காடு சாலையில் மேல்விஷாரம் அருகே அமைக்கப்பட்டு வரும் பை-பாஸ் ரோட் வேலை பூர்த்தியாகிவிட்டதா ?

(இ) இல்லை எனில், எப்போது முடிவடையும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) நடப்பு ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் முடிவடையும்.

காவல்கிணறு-கன்னியாகுமரி சாலை

* 368 வினா—திரு. வீ. கார்த்திசன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரிக்குப் போகும் வழியிலுள்ள காவல்கிணறு-குமரி ரோட்டில் காற்று காலங்களில் windy season ; மண், ரோட்டை மூடுவதை தவிர்ப்பதற்கான செயற்குறிப்பு, ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரி-காவல்கிணறு ரோட்டில் அடிக்கடி காற்றினால் ஏராளமாக மணல் கொண்டு வரப்பட்டு ரோடு மூடப்பட்டுவிடுகிறது. ஆகவே, அங்கே வாகனங்கள் செல்வதற்குக் கூட அடிக்கடி தடஸ்தம் ஏற்படுகிறது. ஆகவே, காற்றின் வேகத்தைத் தடுப்பதற்கு நிரந்தரமான ஏற்பாடு செய்தால் தான் இதனை மாற்ற இயலும். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS